1978 செப்டம்பர் 7]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைகளை சுத்தப் படுத்துவதற்காக இறங்கக் கூடியவர்கள், அந்த சாக்கடைகளில் இருந்து வெளிப்படுகின்ற விஷப் புகையின் காரணமாக இறந்து விடுகின்ற நிலைமை இருக்கிறது. அண்மையிலே கூட இரண்டு பேர் இறந்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படிப் பணிபுரியும் நபர்கள் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பணிபுரிய அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திட அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

* வின 79—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

[அ] காற்றுத் தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்றை அரசு அமைத்திருக்கிறதா ?

[ஆ] ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : [அ] மற்றும் [ஆ] : 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் காற்று மாசு படுவது பற்றி ஆராய அரசு ஒரு குழுவை நியமித்தது. இக்குழு 1972-ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அதிகாரச் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு புதிய தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்தப்படுத்தும் முறைகளைப் பரிந்துரை செய்வதிலும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் முறையில் தண்ணீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புக் குழுவாக மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட இக்குழு மீண்டும் 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு சுற்றுப்புறத் தூய்மை வாரியமாக (The Tamil Nadu Environmental Board) மாற்றியமைக்கப்பட்டு இப்போதும் இயங்கி வருகிறது. தற்போது காற்றுத் தூய்மைத் தடுப்புக்குழு எதுவும் இயங்கவில்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, அந்தக் குழு இராணிப்பேட்டை போன்ற பகுதிகளில், பேர்ணம்பட்டு, ஆம்பூர் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற அந்த துர்நாற்றம், அந்த வழியாக போகிறவர்களுக்குத்தான் தெரியும்—மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அந்த அளவுக்கு அது காற்றை அசுத்தப்படுத்தியிருக்கிறது. எனவே அந்தக் குழு அவற்றினைப் போக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ? அல்லது பரிந்துரை செய்திருக்கிறதா ? அல்லது பரிந்துரை செய்ய அரசு அந்தக் குழுவை வேண்டிக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்தக் குழு தமிழகத்திலே ஆளுகின்ற அனைத்து மக்களின் நலனைக் குறித்து அமைக்கப்பட்ட வாரியம். இந்த வாரியம் கீழ்க்கண்டவைகளைப் பற்றி ஆராய்ந்து வருகிறது.

1. நீர் வளம் பற்றியது.
2. குடியிருப்பு, நகரமைப்பு மற்றும் போக்குவரத்துப் பற்றியது.
3. சுகாதாரம் மற்றும் விளம்பரம் பற்றியது.
4. தொழில் பற்றியது.
5. ஆய்வு மற்றும் வளர்ச்சி பற்றியது.

இவைகளைப் பற்றி ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ப. பொன்னுரங்கம் ; தலைவர் அவர்களே, சென்னை துறைமுகத்தில் இரும்புக் கல் ஏற்றுமதியினால், அதனாலே வருகின்ற டஸ்டினால், ஆஸ்த்துமா, டி. பி. போன்ற வியாதிகள் வருவதாக இராயபுரத்திலே உள்ள மருத்துவர்கள் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று விசாகப்பட்டிணத்திலும் கண்டாலா துறைமுகத்திலும் இந்த இரும்பு கற்களை உரிய முறையில் பாதுகாப்பளிக்கப்பட்டு ஏற்றுமதி செய்வதாகத் தெரிய வருகிறது. ஆகவே அந்த முறையை, கண்டாலாவிலேயும் விசாகப்பட்டிணத்திலும் கடைபிடிக்கும் அந்த முறையைப் பற்றி அறிந்து அது பற்றி இந்தக் குழுவிற்கு ஆலோசனை கூற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ;

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கனவே அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, துறைமுக அதிகாரிகளிடம் குறிப்பிட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குழுவிற்கு ஆளுநரைத் தலைவராகப் போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆளுநர் எப்படித் தலைவராக இருக்க முடியும், செல்லையாவும் தலைவர், ஆளுநரும் தலைவரா ? ஆளுநர் கான்ஸ்டிடுஷனல் ஹெட், எக்சிகூடிவ் ஹெட் அல்ல. எந்த விதியின் அடிப்படையில் ஆளுநரை இந்த அரசாங்கம் தலைவராக நியமித்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு இப்படி ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே 1976 ஆம் ஆண்டு இங்கே நம்முடைய குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது ஆளுநர் அந்த வாரியத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.........

1978 செப்டம்பர் 7]

திரு. க. சுப்பு : குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது அவர் எக்சிகூடிவ் ஹெட், அதனல் அவர் நியமிக்கப்பட்டார். ஆனல் இப்போது அவர் கான்ஸ்டுஷனல் ஹெட். அவரை மாற்றியிருக்க வேண்டாமா. இப்போது கவர்னர் இருக்க முடியாது. முதலமைச்சர்தான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : The Minister has not finished his reply.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது ஆளுநர் அவர்கள் தலைவராகவும், முதலமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும் இருக்கிருர்கள்.

திரு. க. சுப்பு : சட்ட ரீதியான விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன். ஆளுநர் ஆட்சியின் போது அவர் தலைவராக இருந்திருக்கலாம். ஆட்சேபணை இல்லை. அப்போது அவர் நிர்வாகத் தலைவர். ஆனல் இப்போது முதலமைச்சர்தான் இருக்க வேண்டும். ஆளுநர் இருப்பது ஏன் ? குதிரைக்குக் குர்ரம் என்ருல் ஆனைக்கு அர்ரம் என்று சொல்வதா ? எந்த விதியின் கீழ் ஆளுநர் நியமிக்கப்பட்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இது பற்றி தனியாக கேள்வி போடுவார்களானல் விரிவான பதிலைத் தர தயாராக இருக்கிறேன்.

பாலிஸ்டர்—கதர் துணி.

* வின 80—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாலிஸ்டரும் கதரையும் சேர்த்து பாலிஸ்டர் கதர் தயாரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) மற்றும் (ஆ) : ஆம். பாலிஸ்டர் மற்றும் அதைப் போன்ற செயற்கை தும்புகளுடன் பஞ்சினையும் கலந்து, நூல் உற்பத்தி செய்து அதனை துணிகளாக பரீட்சார்த்த முறையில் நெய்து பார்த்ததில், இத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தமுடியும் என கருதப் படுகிறது. ஆனல் மேற்கொண்டு வேலை தொடருமுன், கதர் பற்றிய விளக்கத்தை தகுந்தவாறு மாற்றுவதற்காக சம்பந்தப் பட்ட மாநில மற்றும் மத்திய சட்டங்களைத் திருத்தவேண்டியிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, பாலிஸ்டர், கதர், செயற்கை பாலிஸ்டர் கதர் என்றும் மாற்றம் ஏற்படுகிறபோது, அதனல் விலையேற்றம் ஏற்பட்டு ஏழை எளிய மக்கள்